# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2015/2016 (ஆகஸ்ட் 2018)

## TLS 2233 இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

1. (அ) ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பாக 1980 களுக்குப் பின் வெளிவந்த தொகுப்புக்கள், ஆய்வுகளைப் பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

   (ஆ) இக்காலத்தில் வெளிவந்த நாட்டாரியல் ஆய்வுகளின் போக்குகள் பற்றி விபரிக்குக. (05 புள்ளிகள்)

2. (அ) கள ஆய்வாளன், களத்திற்குச் செல்ல முன் செய்ய வேண்டிய கருமங்கள் யாவை? (10 புள்ளிகள்)

   (ஆ) நாட்டார் வழக்காறுகள் சேகரிக்கப்படும் மூன்று வகைச் சூழல்கள் பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.

   (I) ஈழத்தமிழரின் பாரம்பரிய உணவும் அறிவியலும

   (II) விடுகதைகளின் சமூகப் பயன்பாடு

   (III) 'கவி'களின் வடிவ, பொருள் அமைப்பும் அவற்றின் பயில்வும்

   (IV) வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் (10 x 2 = 20)

### பகுதி – II

4. ஈழத்து, தமிழ் நாட்டார் சடங்குகள் வெளிப்படுத்தும் சமூக மரபுகள், அவற்றின் சமூக முக்கியத்துவம் என்பன பற்றி எடுத்துரைக்குக. (20 புள்ளிகள்)

5. ஈழத்து நாட்டார் கதைகள் வரலாற்று மூலங்களாக அமையுமாற்றை உதாரணங்களின் துணையுடன் எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)

6. "இலங்கைத் தமிழர் மத்தியில் வழங்கி வரும் பழமொழிகள், பெண்கள் பற்றிய தமிழ்ச் சமூகத்தின் கண்ணோட்டத்தைப் புலப்படுத்தி நிற்கின்றன" இக்கூற்றை மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)

7. தாலாட்டுப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கும் தலைமைக் கருத்துக்கள் பற்றி பாடல்களின் துணை கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)